ஆண்டின் பொதுக்காலம் 14 ஆம் வாரம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு C (07-07-2013)

## திருப்பலி முன்னுரை:

இறைத்திருமகன் அருளால் ஆண்டின் பொதுக்காலம் 14 ஆம் வாரம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் அன்பின் சொந்தங்கள் அனைவருக்கும் பணிவான அன்பு வாழ்த்துகளைக் கூறி மகிழ்வு அடைகிறேன்.

எழுபத்திரண்டு சீடர்களை ஆண்டவர் இயேசு இருவர் இருவராக நற்செய்தி அறிவிக்க அனுப்புகின்ற நிகழ்ச்சியை இன்று வாசிக்கிறோம். இயேசு எழுபத்திரண்டு சீடர்களை நற்செய்திப் பணிக்காக அனுப்பும்போது கொடுத்த அறிவுரைகளில் நம் கவனத்தை ஈர்ப்பது: வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம் என்பது. இயேசு வணக்கம் செலுத்துவதற்கும், மரியாதைப் பண்புகளுக்கும் எதிரானவர் அல்லர். பின் ஏன் இந்த அறிவுரையைத் தந்தார்? இக்கேள்விக்கான விடை அறிவுரையின் முதல் வாக்கியத்தில் உள்ளது. அறுவடை மிகுதி. வேலையாள்களோ குறைவு. ஆம், குறைவான எண்ணிக்கையில் உள்ள சீடர்கள் நிறைய மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியைச் செய்ய வேண்டும். எனவே, நேரம், விரைவான பணி என்பது அவர்களுக்கு முகாமையான மதிப்பீடுகள். எனவேதான், வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்தி அதன் மூலம் நேரத்தை வீணடிக்க வேண்டாம். விரைந்து பல இடங்களுக்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்கிறார் ஆண்டவர்.

நமது பணிகளை விரைவாகவும், விவேகமுடனும் ஆற்ற வேண்டும் என்னும் பாடத்தை இன்றைய நற்செய்தி வாசகம் மூலமாகக் கற்றுக்கொள்வோம். பல நேரங்களில் நமது அலுவலகங்களில், பணியிடங்களில் பேசிப் பேசியே நேரத்தை செலவழித்து, அதனால் பணிகளை நேர்த்தியாகச் செய்யத் தவறும் பழக்கம் நம்மிடையே இருக்கிறது. அப்பழக்கத்தை மாற்றி, பேச்சைக் குறைத்து, உழைப்பைப் பெருக்கும் வரத்தை இறைவனிடம் வேண்டுவோம். இத்திருப்பலியில் பங்கேற்று இறையாசீர் பெறுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**“நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,**

உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அன்பே உருவான ஆண்டவரே,**

எங்களை நீர் உம் சீடர்களாக அழைத்து, அமைதியின் கருவிகளாகச் செயல்பட ஆணையிட்டுள்ளீர். உம்மைப் போற்றுகிறோம். ஓநாய்கள்போல் எங்களைக் காயப்படுத்தக் காத்திருக்கும் உலகின் தீமைகள் அனைத்தினின்றும் எங்களைக் காத்தருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நற்செய்தியின் நாயகனே இறைவா,**

என்னுடைய பணிகளை நேர்மையுடனும், கடமையுணர்வுடனும் ஆற்ற எனக்கு வரம் தாரும். பணியிடங்களில் தேவையின்றி பேச்சை வளர்க்கும் பழக்கத்தை மாற்ற உமது தூய ஆவியின் அருளை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

எம் பங்கு மக்கள் அனைவரும் இறைஅன்பிலும, பிறர் அன்பிலும் நாளும் வளரவும், குடும்பங்களில் சமாதானம் நிலவிடவும், பிள்ளைகள் நன்கு படித்திடவும் தேவையான அருளைப் பொழிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கருணையின் தேவா!**

எம் பங்கிலுள்ள இளைஞர்கள், இளம் பெண்கள் அனைவரும் தங்கள் வாழ்நாளை வீணடித்து விடாமல், எதிர்கால வாழ்வை திட்டமிட்டு செயல்படுத்திட தேவையான அருளைத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!**

பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் கணவன் மனைவி அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் அன்பு தூய்மையானதாகவும், நிலையானதாகவும் இருக்கவும், அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப பிரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திடவேண்டுமென்று தயவாய் உம்மை மன்றாடுகின்றோம்.